**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF SESSIONS,
# MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC No. 580 / 2018** |
| **Deposition of witness for** | : | **PW : 8** |
| **Name** | : | **திரு. ரேகசௌந்தர்** |
| **Father's Husband's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **11.06.2025**

எதிரி ஆஜரில்லை. பிரிவு 317 குவிமுச கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை :**

நான் தற்போது மதுரை அய்யர்பங்களாவில் வசித்து வருகிறேன். நான் மதுரை காமராஜர் பல்கலைகழகத்தில் Phd ஆய்வு மேற்கொண்டுள்ளேன். கடந்த 2017-18ம் ஆண்டு நான் மதுரை காமராஜர் பல்கலைகழகத்தில் இதழியல் துறையில் பயின்று வந்தேன். ஜெனிபா என்பவர் எங்கள் துறையின் துறைத்தலைவராக இருந்து வந்தார். 2017ம் ஆண்டு நான் முதலாம் ஆண்டு இதழியல் படித்து வந்தேன். 26.09.2017ம் தேதியன்று எங்கள் HOD ஜெனிபா ரூமில் இருந்து சத்தம் கேட்டது. அப்போது நான் HOD Roomக்கு left sideல் உள்ள வகுப்பறையில் இருந்தேன். சத்தம் கேட்டு நான் ஓடிச் சென்று பார்த்த போது, HOD மேடம் அங்கு இரத்த வெள்ளத்தில் கிடந்தார். அன்றைய தினம் collector கலந்து கொள்ளும் நிகழ்ச்சி இருந்ததால்,

தற்காப்பிற்காக ஒரு ஆம்புலன்ஸ் நிறுத்தப்பட்டிருந்தது. அந்த ஆம்புலன்சில் HOD மேடத்தை சிகிச்சைக்காக அனுப்பி வைத்தோம். அன்றைய தினம் மாலை 06.00 மணிக்கு, மனையழகன் என்ற எனது senior இடம் இருந்து எனக்கு போன் வந்தது. அப்போது, நாகமலைபுதுக்கோட்டை போலிஸ் ஸ்டேசனில் இருந்து, கெஸ்ட் லெக்சரராக வேலை பார்த்த ஜோதி முருகன் அவருடைய job ஐ permanent ஆக்கச் சொன்னதாகவும், அதற்கு HOD மேடம் முடியாது என்று சொன்னதாகவும் அதனால் ஜோதிமுருகன் மேடத்தைக் குத்திவிட்டுச் சென்றதால் அவர் மீது நாகமலை புதுக்கோட்டை ஸ்டேசனில் கேஸ் போடப்பட்டுள்ளதாகச் சொன்னார். மாலை 07.00 முதல் 07.30 மணியளவில், நாகமலை புதுக்கோட்டை போலிசார், ஜோதிமுருகன் வழக்கமாக எங்கெங்கு செல்வார் என்று காட்டச்சொல்லி, என்னையும் எங்கள் சீனியர் மனையழகனையும் கூட்டிச் சென்றார்கள். அப்போது நாங்கள் வடபழஞ்சி மனப்பட்டிமேடு பஸ் ஸ்டாப்பில் ஜோதிமுருகன் நின்றுகொண்டிருந்தார். முதலில் மனையழகன் அவரைப் பார்த்துவிட்டு போலிசில் சொன்னார். பின்னர் சுமார் 08.00 மணியளில் அந்த இடத்திலேயே ஜோதிமுருகனை போலிசார் கைது செய்தார்கள். அங்கேயே போலிசார் ஜோதிமுருகனிடம் confession வாங்கினார்கள். அதற்கு அத்தாட்சியாக என்னிடமும் எனது சீனியர் மனையழகனிடமும் கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காட்டப்பாடும் confession statement ல் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையது தான். எதிரியின் ஒப்புதல் வாக்குமூலம் ஏற்கனவே அதசாஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அன்றைய தினம் சுமார் 09.30 மணியளவில், நாகமலைபுதுக்கோட்டை போலிசார், ஜோதிமுருகனிடம் இருந்து கருப்பு கலர் பல்சர் இருசக்கர வாகனத்தை போலிசார் எங்கள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினார்கள். அதில் நானும் எனது சீனியர் மனையழகனும் கையெழுத்திட்டோம். அத்தாட்சியில்

உள்ள 2 வது கையொப்பம் என்னுடையது தான். அந்த அத்தாட்சி அதசாஆ.6 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. கருப்புகலர் பல்சர் இருசக்கர வாகனம் அசாபொ.9 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்) :</u>**

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை